# புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

**மறைக்கல்வி - வினாடிவினா 003 - அக்டோபர் 24, 2021 முதல் அக்டோபர் 30, 2021 வரை.**

## மூன்றாவது வாரத்திற்கான வினாடிவினா

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

**கேள்வி 01**

முதல் திருவிருந்தில் நற்கருணையின் பாதுகாவலர்கள் யார்?

[ ] புனித தார்சியுஸ், புனித இமல்டா லம்பார்டினி

[ ] புனித தாமஸ் மூர், புனித அகுஸ்தினார்

[ ] புனித பியோ, புனித கிளாரா

[ ] புனித பெனடிட், புனித சியன்னா கத்தரீன்

**கேள்வி 02**

நற்கருணைப்பலி ஆண்டவரின் ______________ நினைவுச் சின்னம். (தி. ச.897)

[ ] பாஸ்கா மறைபொருளின்

[ ] ஆண்டவரின் இறப்பு மற்றும் உயிர்ப்பின்

[ ] உடன்படிக்கையின்

[ ] அன்பின்

**கேள்வி 03**

"நற்கருணை அருளடையாளம் (அருள்சாதனம்) கிறிஸ்தவ வழிபாடு மற்றும் வாழ்வு முழுவதின் ______________." (தி. ச.897)

[ ] தொடக்கம்

[ ] முடிவு

[ ] உச்சியும் ஊற்றும்

[ ] மறைபொருள்

**கேள்வி 04**

"நற்கருணைக் கொண்டாட்டம் கிறிஸ்துவினுடையவும் திருச்சபையினுடையவும் செயல். இதில் ஆண்டவராகிய கிறிஸ்து, குருவின் _______வழியாக அப்ப இரச வடிவில் பொருட்தன்மையில் உடனிருந்து, தம்மையே தந்தையாகிய இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கிறார்". (தி. ச.899-1)

[ ] பலியின்

[ ] அருளின்

[ ] அன்பின்

[ ] பணியின்

**கேள்வி 05**

"குருக்கள், நற்கருணைப் பலியாகிய மறைபொருளில் _____________என்பதை என்றும் நினைவுகூர்ந்து, அடிக்கடி திருப்பலி நிறைவேற்ற வேண்டும்". (தி. ச.904)

[ ] மீட்பின் அருள் இடைவிடாது நிறைவேற்றப்படுகிறது

[ ] மீட்பின் அன்பு செயல் இடைவிடாது நிறைவேற்றப்படுகிறது

[ ] மீட்பின் அலுவல் இடைவிடாது நிறைவேற்றப்படுகிறது

[ ] மீட்பின் பணி இடைவிடாது நிறைவேற்றப்படுகிறது

**கேள்வி 06**

திருவிருந்தின் சாதாரணப் பணியாளர் யார்?. (தி.ச.910-1)

[ ] ஆயர், குரு, திருத்தொண்டர்

[ ] குரு, திருத்தொண்டர், பொதுநிலையினர்

[ ] குரு, வேதியர், திருத்தொண்டர்

[ ] திருத்தொண்டர், வேதியர், பொதுநிலையினர்

**கேள்வி 07**

"புனிதமிகு நற்கருணையைப் பெறவிருக்கும் ஒருவர், திருவிருந்துக்குமுன் குறைந்த அளவு ____________ தண்ணீரும் மருந்தும் மட்டும் நீங்கலாக எவ்வித உணவையும் பானத்தையும் தவிர்க்க வேண்டும". (தி. ச.919-1)

[ ] இரண்டு மணிநேரம்

[ ] அறை மணிநேரம்

[ ] ஒருமணி நேரம்

[ ] ஒன்றரை மணிநேரம்

**கேள்வி 08**

நோயாளிகளின் இறுதி வழி உணவை மிகவும் காலம் தாழ்த்தக் கூடாது; நோயாளிகள் முற்றிலும் _____________ இருக்கும் போது இறுதிவழி உணவால் ஊட்டம் பெறுவதை ஆன்ம அக்கறை கொண்டவர்கள் ஆர்வமுடனும் விழிப்புடனும் கவனிக்க வேண்டும். (தி. ச.922)

[ ] அக்கறையுடன்

[ ] தன்னுணர்வுடன்

[ ] பாவமில்லாதவராக

[ ] பயமில்லாதவராக

**கேள்வி 09**

"புனிதமிகு நற்கருணை பாதுகாத்து வைக்கப்படும் புனித இடங்களில், குறைந்த அளவு மாதத்திற்கு எத்தனை முறை திருப்பலி கொண்டாடப்படவேண்டும்". (தி. ச.934-2)

[ ] மூன்று முறை

[ ] நான்கு முறை

[ ] ஒரு முறை

[ ] இரண்டு முறை

**கேள்வி 10**

"புனிதமிகு நற்கருணை பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள திருப்பேழைக்குமுன் ______________ குறித்துக்காட்டவும் மகிமைப்படுத்தவும் ஒரு சிறப்பு விளக்கு எப்பொழுதும் எரிய வேண்டும்". (தி. ச.940)

[ ] கிறிஸ்துவின் அன்பை

[ ] கிறிஸ்துவின் உடனிருப்பை

[ ] கிறிஸ்துவின் தியாகத்தை

[ ] கிறிஸ்துவின் மன்னிப்பை

**கேள்வி 11**

நற்கருணை வழிபாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ளது எது? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 186)

[ ] இயேசுவின் கடைசி இராவுணவு

[ ] இயேசுவின் எருசலேம் பயணம்

[ ] இயேசுவின் கல்வாரிப் பயணம்

[ ] இயேசுவின் எம்மாவுப் பயணம்

**கேள்வி 12**

புதிய ஏற்பாட்டில் இயேசுவே குருவாகவும் ____________ விளங்குகிறார்.

[ ] பலிபொருளாகவும்

[ ] செம்மறியாகவும்

[ ] பலிபீடமாகவும் செம்மறியாகவும்

[ ] பலியாகவும்

**கேள்வி 13**

"நற்கருணைப் பலியை நாம் நினைவுப்பலி என்றும் _____________ பலி என்றும் அழைக்கிறோம்". (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 188)

[ ] அன்பின் பலி

[ ] தியாகத்தின் பலி

[ ] பாவப்பரிகாரப் பலி

[ ] பாஸ்காப் பலி

**கேள்வி 14**

"நற்கருணையே ____________ உணவு". (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 188)

[ ] பலியின்

[ ] ஆன்மீக

[ ] அன்பின்

[ ] அருளின்

**கேள்வி 15**

விண்ணக விருந்தின் முன்சுவை என்றழைக்கப்படுவது ______________ (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 188)

[ ] திருப்பலி

[ ] பாவ மன்னிப்பு

[ ] நோயில் பூசுதல்

[ ] நற்கருணை

**கேள்வி 16**

திருப்பலி முடிந்து விட்டால் இயேசுவின் பிரசன்னம் அங்கு இருப்பதில்லை எனவே மீண்டும் அந்த அப்பம் சாதாரண அப்பமாகவே மாறிவிடுகிறது என்பது எதற்கு எதிரானது. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 190)

[ ] ஆங்கிலிக்கன் சபை விசுவாசத்திற்கு

[ ] தென்னிந்திய திருச்சபை விசுவாத்திற்கு

[ ] கத்தோலிக்க விசுவாசத்திற்கு

[ ] இரட்சணிய சபை விசுவாசத்திற்கு

**கேள்வி 17**

அருளடையாளங்களின் மையம் என்றழைக்கப்படுவது ______________ (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 191)

[ ] நற்கருணை

[ ] திருமணம்

[ ] ஒப்புரவு

[ ] குருத்துவம்

**கேள்வி 18**

தனியார் கொண்டாட்டம் இல்லாத அருளடையாளமாக விளங்குவது எது? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 191)

[ ] திருமுழுக்கு

[ ] திருமணம்

[ ] ஒப்புரவு

[ ] நற்கருணை

**கேள்வி 19**

நற்கருணை ________________ அடையாளமாகவும், பகிர்வு வாழ்வின் அடையாளமாகவும் விளங்குகிறது. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 191)

[ ] தியாகத்தின்

[ ] ஒன்றிப்பின்

[ ] அர்ப்பணத்தின்

[ ] இரக்கத்தின்

**கேள்வி 20**

கத்தோலிக்க கிறிஸ்த்தவர்கள் திருப்பலிக்கு பிறகு நோயாளிகளுக்கு நற்கருணையை எந்த நம்பிக்கையின் அடிப்படையில் எடுத்துச் செல்கிறார்கள்?; (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 190)

[ ] இயேசுவின் மீது உள்ள நம்பிக்கை

[ ] இயேசுவின் பிரசன்னம்

[ ] நற்கருணையில் இயேசு எப்போதும் பிரசன்னமாயிருக்கிறார்

[ ] அசைக்க முடியாத நம்பிக்கை

**கேள்வி 21**

"நற்கருணை ஆண்டவர் இயேசு கிறிஸ்து இங்கு மேய்ப்பராகவும் மேய்ச்சல் நிலமாகவும் உள்ளார்" என்று கூறிய புனிதர் யார்? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 70)

[ ] அக்குவினோ நகர் புனித தோமா

[ ] ஆயராகிய புனித அம்புரோஸ்

[ ] புனித சவேரியார்

[ ] புனித அந்தோணியார்

**கேள்வி 22**

திருப்பலி கொண்டாட்டம் முழுவதற்கும் மையமும் சிகரமுமாக உள்ளது எது? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 70)

[ ] காணிக்கை மன்றாட்டு

[ ] இறைவார்த்தை மன்றாட்டு

[ ] சபை மன்றாட்டு

[ ] நற்கருணை மன்றாட்டு

**கேள்வி 23**

திருப்பலி நூலில் மொத்தம் எத்தனை நற்கருணை மன்றாட்டுகள் இடம் பெற்றுள்ளன? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 62)

[ ] 10

[ ] 8

[ ] 6

[ ] 2

**கேள்வி 24**

திரு அப்பத்தை யார் பிடலாம்? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 66)

[ ] அருள்பணியாளர் / திருத்தொண்டர்

[ ] ஆயர் / திருத்தொண்டர்

[ ] ஆயர் / அருள்பணியாளர்

[ ] திருத்தொண்டர் / வேதியர்

**கேள்வி 25**

திருப்பலியில் அப்பம் பிடுதல் நிகழ்வு எதை நமக்கு நினைவுபடுத்துகிறது? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 66)

[ ] கிறிஸ்துவின் உடல் உடைக்கப்பட்டதையும் இரத்தம் சிந்தப்பட்டதையும்

[ ] கல்வாரிப் பயணத்தை

[ ] பூங்காவனத்தில் இரத்தம் வியர்த்ததை

[ ] பாஸ்கா நிகழ்வை

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [✔] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.